www.Padasalai.Net www.TrbTnpsc.com

D.KARTHIC PG ASSISTANT

Reg. No

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## வகுப்பு - 11

காலம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்:90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14 x 1 = 14

1. 'கபாடபுரனுகளைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்' - அடி மோனையைத் தேர்வு செய்க.
அ) கபாடபுரங்களை காவுகொண்ட ஆ) காலத்தால்-கனிமங்கள்
இ) கபாடபுரங்களை-காலத்தால் ஈ) காலத்தால்-சாகாத
2. 'வான் பொய்த்தது' என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள் .......
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை இ) மின்னல் வெட்டியது
ஈ) வானம் என்பது பொய்யானது
3. 'கொன்றைசூடு' என்பதன் இலக்கணக்குறிப்பு ..........
அ) இரண்டாம் வேற்றுமைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) நான்காம் வேற்றுமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
4. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி,இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி
6. ஒப்புரவு என்பதன் பொருள் ......
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது
ஈ) செல்வமுடையது
7. 9அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ......
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
8. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
9. 1854ஆம் ஆண்டு .......... தலைமையிலான குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தற்காலக் கல்வியும் தேர்வு முறையும் உருவெடுத்தன.
அ) ஹண்டர் ஆ) சார்லஸ்வுட் இ) ஹென்றி ஆடம்ஸ்
ஈ) தாமஸ் மன்றோ
10. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத்துவிபாஷி
ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
11. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
12. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ........ நினை
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை
13. அகநானூறு ......... புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு
அ) 155 ஆ) 145 இ) 135 ஈ) 125
14. சுருக்கிய குடையைப் போலத் தோன்றும் அசோக மரம் ....... உவமை.
அ) வினை ஆ) பயன் இ) மெய் ஈ) உரு

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

## பகுதி – II

### பிரிவு – அ

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?
18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு – ஆ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. தமிழ்நாட்டின் மாநிலமரம் – சிறுகுறிப்பு வரைக.
20. கோட்டை என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
21. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

### பிரிவு – இ

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. பிறமொழிச் சொற்களுக்குத் தமிழாக்கம் தருக.
    அ) வாடகை ஆ) பாஸ்போர்ட்
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    குரை, குறை
24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
    அறிவில்லாதவன்
25. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
    நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனை
26. கலைச்சொல் தருக.
    i) Document ii) Agreement
27. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) இழுக்கின்றி ஆ) அரும்பொருள்
29. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.
    அ) மலிந்த ஆ) ஈன்ற
30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

## பகுதி – III

### பிரிவு – அ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. `ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
    அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்` – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. `கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது` – யாது?
34. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

### பிரிவு – ஆ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. `மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது` – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பிரிவு – இ

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. வேற்றுமை அணி (அ) பிறிதுமொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(மதி, மை, ஆழி, இதழ்)

1) கண்ணிலும் எழுதலாம், வெண்தாளிலும் எழுதலாம்.......

2) அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவேதான் .....

3) பூவின் உறுப்பும் நானே, புன்னகையின் பிறப்பிடமும் நானே .......

4) வண்டியையும் இயக்கும், பெரும் கப்பலையும் தாங்கும் .......

41. தமிழாக்கம் தருக.

1) The pen is mightier than the sword.

2) A picture is worth a thousand words.

3) Work while you work and play while you play.

4) Knowledge rules the world.

42. கீழ்க்கண்ட பாடலில் இடம் பெற்றுள்ள மோனை, எதுகை, இயைபு, அணிநயம், சுவை நயம், சந்த நயங்களுள் எவையேனும் மூன்றினைச் சுட்டி மையக்கருத்துடன் எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர் – பாரதியார்

43. பள்ளி அல்லது சுற்றுச்சூழல் – ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 6 = 18

44. அ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

(அல்லது)

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க. (அல்லது)

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

பகுதி – V

4 + 2 = 6

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:

அ) 'அம்ம வாழி' .... எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.

ஆ) 'பகை – என முடியும் குறளை எழுதுக.

-----------

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com